# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள்.03.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9223/H/2025**

திரு.T.சந்திரசேகரன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
முசிறி வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 621211. — பொது அதிகார அமைப்பு

**கோரப்பட்ட தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 25.07.2024 அன்று, **முசிறி தாலுகாவில் கடந்த 08.01.2020 முதல் 08.07.2024 வரை மணல் கடத்தலில் ஈடுபட்ட வண்டிகளின் முழு விவரம்** உள்ளிட்ட 8 இனங்களுக்கான தகவல்கள் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனு (03.07.2026) இன்று காணொலி காட்சி மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| **மேல்முறையீட்டாளர்** | திரு.T.சந்திரசேகரன் அவர்கள் இன்றைய விசாரணைக்கு காணொலி காட்சி வாயிலாக ஆஜரானார். |
| **பொதுத் தகவல் அலுவலர்** | பொதுத் தகவல் அலுவலர் திரு.மொ.கண்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

# ஆணை

இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் 19.09.2024 மற்றும் 20.11.2025 ஆகிய தேதிகளிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

2. மனுதாரர் பொதுநலன் கருதி தகவல்களை கேட்டதன்பேரில் தகவல்கள் முழுமையாக இணைக்கப்பட்டு, அளிக்கப்பட்டதாக பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணையில் தெரிவித்தார். ஆனால் மனுதாரர், பொது அதிகார அமைப்பால் தகவல்கள் முறையாக சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், சில தகவல்கள் முழுமையாக அளிக்கப்படவில்லை என்றும் தெரிவித்து, அதனைப் பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டதனால், பொது தகவல் அலுவலர் அதுசம்பந்தமான கோப்புகள் இருக்கின்றன என்று ஆணையத்திடம் தெரிவித்ததன் அடிப்படையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

- **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 25.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன்கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள இனங்களுக்கான தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-வின்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில், மேல்முறையீட்டாளரிடமிருந்து உரிய கட்டணத்தை செலுத்தக் கோரி பெற்று, தகவல்களை சான்றொப்பமிட்டு வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக தயார் செய்து <u>11.08.2026</u> அன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**
- **பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு காலதாமதமாக தகவல் வழங்கப்பட்டுள்ளதனை ஆணையம் பதிவு செய்கின்றது. தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 7-இன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக வழங்க பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். ஆதலால், காலதாமதமாக தகவல் வழங்கிய அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)-இன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து பெற்று, <u>11.08.2026</u> அன்று ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, சமர்ப்பிக்க இன்றைய தினம் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொது தகவல் அலுவலருக்கு இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9223/H/2025</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
முசிறி வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 621211.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.T.சந்திரசேகரன்,
எண்.9/120, கவரா தெரு,
வெள்ளாளப்பட்டி அஞ்சல்,
முசிறி வட்டம்,
திருச்சிராப்பள்ளி-621211.
தொலைபேசி - 9843546628.

Copy to: file. GP/PC